# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 01 /பேரூ/2026**
**நாள் : 20.04.2026**

R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பரவை சிறப்புநிலை பேரூராட்சி,
மதுரை மாவட்டம். – எதிர் மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், பிளாட் எண். 5-A, அய்யப்பன் தெரு, நீர்நிலைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நலச்சங்கம் என்ற முகவரியை சேர்ந்த திரு. R. மயில்சாமி என்பவரது 20.12.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.12.2025 அன்று பெறப்பட்டு 01/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், பிளாட் எண். 5-A, அய்யப்பன் தெரு, நீர்நிலைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நலச்சங்கம், என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 20.12.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

R. மயில்சாமி, செயலாளர், நீர்நிலைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நலச்சங்கம், மனை எண். 5-A அய்யப்பன் தெரு, செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி, மதுரை-18-ல் உள்ள நான், மதுரை மாவட்டம், வடக்கு வட்டம், பரவை பேரூராட்சிக்குட்பட்ட மதுரை மெயின் ரோடு தேசிய நெடுஞ்சாலை ஸ்ரீ இருளப்பசாமி திருக்கோயிலுக்கு எதிரே உள்ள நிலா டவர்ஸ் என்ற பெயரில் உள்ள வணிக கட்டிடம் நான்கு பக்கங்களிலும் திறவிடம் விடாமலும் (side set back) சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் வாடிக்கையாளர்கள் வாகனங்களை நிறுத்துவதற்கு (parking) விடாமல் கட்டடம் கட்டப்பட்டும், இக்கட்டிடத்திற்கு மிக அருகில் இருப்பு பாதை செல்லுகிறது. இரயில்வே பாதுகாப்பு சட்டத்தின்படி 100 அடி இடைவெளி இடம் விடாமலும்,

அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி நிலா டவர்ஸ் வணிகக் கட்டிடம், பொதுமக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால், தமிழ்நாடு பொது கட்டிடம் (உரிமம்) சட்டம் 1965-ன்படி வட்டாட்சியர் அவர்களிடம் உரிமம் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் இயங்கி வருகிறது. மேலும் உள்ளூர் திட்ட குழுமத்தாலும் அனுமதி பெறாமல் பரவை பேரூராட்சியில் மட்டும் அனுமதி பெறப்பட்டுள்ளது. நிலா டவர்ஸ் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி 10.12.2025 தேதியில் விரைவு அஞ்சல் (speed post) ET716654217IN புகார் மனு கொடுத்துள்ளேன். ஆனால் பரவை பேரூராட்சியின் செயல் அலுவலர் அவர்கள் கட்டிடத்தின் உரிமையாளர் அவர்களிடம் ஏதோ ஒரு பலனை பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்க தயக்கம் காட்டி வருகிறார். செயல் அலுவலர் அவர்கள் RTI Act 2005 பிரிவு 6(1)-ல் மனு செய்து கட்டிடத்தை பற்றிய தகவல் கேட்டாலும் தகவல் தரவில்லை. மேற்படி நிலா டவர்ஸ் கட்டிடத்தை கண்காணிக்க தவறிய செயல் அலுவலர்கள் மற்றும் இதர பணியாளர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டிக்கொள்கிறேன். எனவே சட்டத்திற்கு புறம்பாகவும் விதிகளை மீறியும் கட்டப்பட்ட நிலா டவர்ஸ் கட்டிடத்தின் மீது தமிழ்நாடு அரசாணை எண். 7, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 10.01.2023-ன்படியும், நகர்ப்புற ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 21724/2016/BA2 நாள் 03.01.2017ன் உத்தரவின்படியும் மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் பிரிவுகள் 56(1), 57 மற்றும் உடன் படிக்கப்பட்ட பிரிவு 85 கீழ் Stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் (Lock and Seal) மற்றும் கட்டிடத்தை அகற்றும்படியும் demolition வழங்கி மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.01.2026 நாளிட்ட அறிவிப்பின் மூலம் பரவை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பரவை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 19.01.2026 அறிக்கை ந.க. எண். 18/2026-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"மதுரை மெயின்ரோடு தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள நிலா டவர்ஸ் வணிக கட்டிடத்திற்கு பரவை சிறப்புநிலை பேரூராட்சியிலிருந்து கட்டிட உரிமம் எண். 196/2021-2022 நாள் 25.01.2025 மற்றும் 190/2022-2023. நாள் 12.01.2023ன்படி திருமதி. ஜெ. அனிதா ராஜ் என்பவரால் வணிகத்திற்கான கட்டிட உரிமம் பெறப்பட்டு, கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் திரு. இரா. மயில்சாமி என்பவரால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நிலா டவர்ஸ் வணிக கட்டிடத்திற்கு வழங்கப்பட்டுள்ள கட்டிட அனுமதி, கட்டிடத்திற்கு வழங்கப்பட்டுள்ள சதுரடி மற்றும் சொத்து வரி விதிப்பு குறித்து தகவல் கோரப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து திருமதி. ஜெ. அனிதராஜ் என்பவரால் கட்டிடம் குறித்து தனது ஆவணங்களை வழங்க வேண்டாம் என எழுத்துபூர்வமாக இப்பேரூராட்சி அலுவலகத்திற்கு கடிதம் வழங்கியுள்ளார். எனவே இப்பேரூராட்சி அலுவலக கடிதத்தின்படி மூன்றாம் நபர் தகவல் வழங்கப்பட இயலாது என்று திரு. இரா. மயில்சாமி என்பவருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இதனை தொடர்ந்து மேற்காணும் நிலா டவர்ஸ் வணிக கட்டிடம் தொடர்பாக மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரை அமர்வு வழக்கு எண். W.P. (MD) No. 34305/2025ன்படி

திரு. இரா. மயில்சாமி என்பவரால் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் புகார் மனு மற்றும் பரவை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியவற்றை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி இடத்தை சார்ந்த் மனுதாரர் திரு. R. மயில்சாமி என்பவர் தனது 20.12.2025 நாளிட்ட மனுவில் மதுரை மாவட்டம், பரவை சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட மதுரை மெயின்ரோடு தேசிய நெடுஞ்சாலையில் ஸ்ரீ இருளப்பசாமி கோவிலுக்கு எதிரே அமையப் பெற்றுள்ள " நிலா டவர்ஸ்" என்கிற வணிகக் கட்டடம் குறித்து கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

(i) உள்ளூர் திட்ட குழுமத்தின் அனுமதி பெறாமல், பரவை பேரூராட்சியில் மட்டும் அனுமதி பெற்றும் மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது.
(ii) நான்கு புறங்களிலும் பக்க திறவிடம் (No set back) விடப்படவில்லை.
(iii) இருப்பு பாதை அருகில் உள்ளதால் இரயில்வே பாதுகாப்பு சட்டத்தின் கீழ் 100 அடி இடைவெளி விடப்படவில்லை.
(iv) வாகன நிறுத்துமிடம் இல்லாமல் உள்ளது என தெரிவித்துள்ளார்.

மேற்காணும் புகார் தொடர்பாக, நிலா டவர்ஸ் வணிக கட்டட உரிமமானது பரவை சிறப்புநிலை பேரூராட்சியால் கட்டட உரிமம் எண். 196/2021-2022 நாள் 25.01.2025 மற்றும் 190/2022-2023 நாள் 12.01.2023ன்படி திருமதி. ஜெ. அனிதா ராஜ் என்பவருக்கு வழங்கப்பட்டு கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

மனுதாரர் திரு. R. மயில்சாமி என்பவர், நிலா டவர்ஸ் கட்டடம் தொடர்பாக, பேரூராட்சியால் வழங்கப்பட்ட வரைபட அனுமதி, கட்டடம் கட்ட அனுமதிக்கப்பட்ட மற்றும் கட்டப்பட்டுள்ள பரப்பளவு, கட்டடத்தின் நான்கு புறங்களிலும் பக்க திறவிடம் விவரம் மற்றும் வாகன நிறுத்துமிடத்திற்கு அனுமதிக்கப்பட்ட பரப்பளவு போன்ற தகவல்கள் 2005ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் பொது தகவல் அலுவலரான பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரியும் தகவல் அளிக்கப்படவில்லை. எனவே இச்சட்டத்தின் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலரான மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் மனு சமர்ப்பிக்கப்பட்டதில் அவரும் எவ்வித தகவலும் அளிக்காததால், மனுதாரர் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு தனது 24.09.2025 நாளிட்ட புகார் மனுவை சமர்ப்பித்துள்ளார். ஆனால் மனுதாரரின் புகார் மனு குறித்து மாநில தகவல் ஆணையத்தில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதால், தனது 24.09.2025 நாளிட்ட மனுவை மாநில தகவல் ஆணையத்தால் பரிசீலிக்கக் கோரி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு (W.P. (MD) No. 34305/2025) தொடரப்பட்டு அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் இணையதளம் வாயிலாக அறிய வருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில் 2014ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b)-ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to;-

(a) xxxxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

இந்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் நிலா டவர்ஸ் வணிக கட்டடம் தொடர்பாக மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு (W.P. (MD) No. 34305/2025) தொடரப்பட்டு. அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக பரவை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ள நிலையில், 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b)-ன்படி மனுதாரரின் **20.12.2025** நாளிட்ட புகார் மனுவினை விசாரிக்க இயலாது என்பதால் இப்புகார் மனு தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. R. மயில்சாமி,
செயலாளர், நீர்நிலைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நலச்சங்கம்,
பிளாட் எண். 5 A, அய்யப்பன் தெரு, செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை மாவட்டம் – 18.

2) செயல் அலுவலர்,
பரவை சிறப்புநிலை பேரூராட்சி, மதுரை மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

22/4/26

செயலாளர்

22/4/26